**ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் -கூறு II - 2021**

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு II இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 16 ஆம் திகதிய 8878 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் (அ) ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை மீளமைத்து வலுப்படுத்தும் மூலோபாயங்களை அமுல்ப்படுத்துதல் (ஆ) அமுல்ப்படுத்தல் ஆதரவு மற்றும் புத்தாக்க மானியங்கள் மற்றும் (இ) நிச்சயமறற அவசரகால நிலைமை பதிலளிப்பு ஆகிய பெயர்களிலான மூன்று கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 697,936.86 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 4,419 மில்லியன் ஆகும். அதில் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதில் ரூபா 2,368.27 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 15.00 மில்லியன் செயற்திட்டக் கூறு II இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இக் கூற்றிற்கான ஒதுக்கீடு மீளாய்வாண்டின் போது ஐ.அ.டொலர் 6.00 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு. | இணங்காமை / கணக்காய்வு சர்ச்சை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காளரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2013 நவம்பர் 29 ஆந் திகதிய 230/2013 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் சுற்றறிக்கை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டிய போதும் ரூபா 351 மில்லியன் மற்றும் ரூபா 185 மில்லியன் தொகையான முறையே வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் வெளிவாரி வளங்கள் திணைக்களத்திடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்று 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் கணக்கிடுவதற்னு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | | |
| | (i) பந்தி 9.2 | மதிப்பீட்டுக் குழு 26 உறுப்பினரை கொண்டுள்ள போதும் கூட்டங்களில் பங்குபற்றியோரின் சராசரி எண்ணிக்கை 27 சதவீதத்தை விட குறைவாகவிருந்தது. | அழைக்கப்பட்டு நினைவூட்டப்பட்டு மற்றும் உறுதிப்படுத்தல் பெறப்பட்ட போதும் பல உறுப்பினர்கள் சுகாதார அமைச்சில் இல்லாதிருந்தமையால் பங்குபற்றல் குறைவாகவிருந்தது. | குழுவிலுள்ள உறுப்பினர்களின் வருகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) பந்தி 9.3 | செயற்திட்ட வழிகாட்டல் குழுவானது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடப்பட வேண்டியபோதும் குழுவானது மீளாய்வாண்டின் போது ஒருமுறை மாத்திரம் கூடப்பட்டது. | இந்தச் செயற்திட்டமானது மாகாண மட்டங்களில் அமுல்படுத்தப்பட்டமையால் பல உத்தியோகத்தர்கள் இந்தக்குழுவில் ஈடுபட்டிருந்தனர். ஆகையால், உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டல் குழுவானது நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மதிப்பீட்டு ஆவணமானது ஆண்டொன்றிற்கு இரண்டு தேசிய வழிகாட்டல் குழுவை வைத்திருக்கின்றமையால் ஏற்பாட்டை தீர்ப்பனவு செய்கின்றது. எனினும், 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் பிரிவாக மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அரசாங்கம் அதிகமாக ஒவ்வொரு இரண்டுமாதங்களில் செயற்திட்ட வழிகாட்டல் குழுவை கூடுகின்றது. | |
| (இ) | 2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கை. | ரூபா 79.76 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான கணக்கெடுப்புச் சபையானது 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது செயற்திட்டத்தால் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கெடுப்பு சபையை நடாத்துவதற்கான குழுவானது சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் வேலைச்சுமையால் திட்டமிடப்பட்டவாறு அவர்களால் கணக்கெடுப்பினை ஆரம்பிக்க முடிந்திருக்கவில்லை. எனினும், கணக்கெடுப்புச் சபை முடிவடைந்ததும் அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்கெடுப்பு சபையினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 64 ஆம் பந்தி | செயற்திட்டக் கூறு – I இன் கீழ் மத்திய மட்ட , மாகாண மட்டத்தால் ஏற்பட்ட சுகாதாரத்துறைச் செலவீனம் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களையும் உள்ளடக்கி செயற்திட்டம் மூன்று தனியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கப்பட வேண்டிய போதும் செயற்திட்டக் கூறு – I இன் கீழுள்ள 2021 ஆம் ஆண்டிற்கான மத்தியமட்ட மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானது இந்த அறிக்கைத் திகதி வரையிலும் செயற்திட்டத்தால் சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்தக் கடிதத்திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும். | மூன்று தனியான நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்பட்ட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.2 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகளின்மை.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு. |
|---|---|---|
| ரூபா 80 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 6 மில்லியன் பெறுமதியான வங்கி நடைமுறை கணக்கு மீதி கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மற்றும் உறுதிப்படுத்தல் கடிதங்கள் போன்ற எழுத்து மூலமான சான்றுகள் சமர்ப்பிக்காமையால் போதியளவில் உறுதிப்படுத்த முடியவில்லை. | வரைபு கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட ரூபா 5,938,209 ஆனது 2021/12/31 இல் உள்ளவாறு உள்ளபடியான காசுமீதியாகவுள்ளதுடன் வங்கியின் நடைமுறைக் கணக்கு மீதியாக இருக்கவில்லை. | இந்தத் தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|
| ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களிற்கான 600 டிஜிற்றல் அடையாள முறைமையினை வழங்கல், ஸ்தாபித்தல் மற்றும் தரகிடல் மற்றும் பராமரிப்பிற்கான வரியில்லாத ஒப்பந்தம் ரூபா 77 மில்லியன் கிரயத்திலான ஒப்பந்தம் 2021 மே 07 இல் வழங்கப்பட்டது. எனினும், ரூபா 77 மில்லியன் கிரயத்திலான 599 முறைமைகள் கட்டளையிடப்பட்டதுடன் ரூபா 75 மில்லியன் கிரயத்திலான 584 முறைமைகள் மாத்திரம் 2021 திசெம்பர் 31 இல் பெறப்பட்டிருந்தது. எனினும், தேவையான முறைமையானது ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களில் போடப்பட்டது என்பதற்கான சாத்தியவள மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் கொள்வனவு செய்யப்பட்டமையால் அவை பல பிரச்சனைகள் மற்றும் தடங்கல்களை நேர்கொள்ளவேண்டியிருந்ததுடன் 2022 மே 25 இல் உள்ளவாறு 518 முறைமைகள் மாத்திரம் தாபிக்கப்பட்டு தரகிடப்பட்டிருந்தது. | சுகாதார அமைச்சிற்காக அர்ப்பணிக்கப்பட்ட வேண்டப்பட்ட பியோ ரீவி ஊடகத்தினை நடாத்துவதற்கு பதிலாக டிஜிற்றல் அடையாள முறைமையானது பல முகாமைத்துவ காரணங்களால் சுகாதார அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப்பட்டது. வழங்கல் பிரேரணை வெற்றிகர விலைமனுதாரர் எம்/எஸ் அபான்ஸ் பீஎல்சீக்கு 2021.05.07 இல் வழங்கப்பட்டது. இது வங்கிகளில் செயற்படுத்தப்பட்ட மிகச்சிறிய அளவிலான அடையாளப்படுத்தப்பட்ட முறைமையிலும் பார்க்க பொதுச் சேவைத்துறையிலுள்ள புதுமையான நடவடிக்கை என்பதால் மூல பீஎம்யூ திட்டமிடப்பட்டதுடன் உலகவங்கியானது செயற்திட்ட அமுல்படுத்தலுடன் இணைந்த அளவிடப்பட்ட நடவடிக்கையாகவிருந்தமையால் அனுமதியை வழங்கியது. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். |